***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.422/2022 – P.W.5 (LW7)***

| | |
|---|---|
| *Name* | மருத்துவர் திரு. மோகன்ராஜ் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | |

**எதிரி1 ஆஜர். 2, 3, 4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 28.05.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.09.2022ம் தேதியன்று அரசு தலைமை மருத்துவமனையில் 24 மணி நேர பணியிலிருந்தபோது காலை 11.50 மணியளவில் 22 வயதுடைய விக்னேஷ் என்பவரை அவருடைய உறவினர் பிரகாஷ் என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார். அவர் 21.09.2022ம் தேதியன்று காலை 10.25 மணியளவில் உள்ளிக்கோட்டை பெட்ரோல் பங்க் மோகன் சிமிண்ட் ஓர்க்ஸ் அருகில் அடையாளம் தெரிந்த 4 ஆண்கள் அருவாளால் தாக்கியதாக அவரே கூறினார். அவரை பரிசோதித்தபோது, முழு சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு 2 x 1 x 0.5 செ.மீ கிழிந்த காயமானது இடது முழங்கையில் இருந்தது. இடது கையின் மேற்புறத்தில் இரத்தக்கட்டு இருந்தது. நெற்றியின் வலது பக்கத்தில் இரத்தக்கட்டு இருந்தது. மூக்கிலிருந்து இரத்தம் வந்தது. அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என சான்று வழங்கினேன். (**விபத்து பதிவேடுடன் இணைந்த காயச்சான்று அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நோயாளி நடந்ததாக சொல்லப்படும் சம்பவ நேரத்திலிருந்து 1 மணி நேரம் கால தாமதமாக தான் சிகிச்சைக்கு வந்தார் என்றால் - சரிதான். நோயாளி தன்னை கம்பியால் தாக்கியதாக கூறவில்லை என்றால் - சரிதான்.

2. போலிசார் ஆயுதத்தினை காண்பித்து என்னிடம் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் - சரிதான். முதல் காயத்தை பொறுத்து Left Fore Arm என்பது தமிழில் முன்கை

என்றால் - சரியல்ல முழங்கை. Left Elbow என்பது தமிழில் என்னவென்றால் - இடது கையின் மூட்டுப்பகுதி.

3. முதல் காயமானது கூர்மையான ஒரு பொருளில் விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புண்டு என்றால் - சரிதான். 2வது காயமான வீக்க காயம் சாதாரணமாக கீழே விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புண்டு என்றால் - சரிதான்.

4. எனது விசாரணையில் நோயாளி இடது முழங்கை, இடது மணிக்கட்டு, இடது கால் முட்டி மற்றும் முகம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். இடது கை நடுவிரலில் காயம் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான்.

5. சாதாரணமாக, மூக்கில் ஏற்பட்ட இரத்த கசிவானது தோராயமாக 10-20 நிமிடங்களில் உறைந்துவிடும் என்றால் - சரிதான். வீக்க காயங்களின் வயதோ, நிறங்களோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான்.

6. விபத்து பதிவேட்டில் எந்த காயம் கொடுங்காயம் என்று குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் - சரிதான். நோயாளி என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக்கொண்டு பரிந்துரையின் பேரில் வந்தாரா என்றால் - இல்லை. நேரடியாக தான் வந்தார்.

7. நோயாளி சொன்ன நேரத்திற்கு பின்னிட்டு கூட மேற்கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் - சரிதான்.